**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 40 OF 2013**

**Deposition of Witness for : PW.16**

| | |
|---|---|
| **Name** | : திரு.எஸ். நாகராஜன் |
| **Father's Name** | : சுப்பிரமணி (லேட்) |
| **Village** | : வேலூர் |
| **Taluk** | : குடியாத்தம் |
| **Caste** | : ... |
| **Calling** | : காவல் ஆய்வாளர் |
| **Religion** | : இந்து |
| **Age** | : 57 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06-11-2020.**

**முதல் விசாரணை.**

நான் தற்போது காவல் ஆய்வாளர் உயர்நீதிமன்ற விழிப்பு பிரிவில் வேலூரில் பணி செய்து வருகிறேன். நான் 2012ம் வருடம் வெறையூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணி புரிந்த போது 13.6.2012ம் தேதி அன்று தச்சம்பட்டு காவல் நிலையத்தில் ரமேஷ் த/பெ. மன்னார் என்பவர் கொடுத்த புகார் மனுவை ஆய்விற்கு எடுத்துக் கொண்டு 14.6.2012ம் தேதி அன்று சம்பவ இடமான மன்னார்பாளையத்திற்கு சென்று பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் ஆகியவற்றை சாட்சிகள் செல்லவேல் மற்றும் சேகர் முன்னிலையில் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.த.சா-ஆ. 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வெங்கடேசன் என்பவரை பார்த்த போது அவர் இறந்து போய் இருந்தார். உடனே நான் பிரேத விசாரணை அறிக்கை சாட்சிகள் முன்பாக தயார் செயதேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா-ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு சாட்சிகள் தனலட்சுமி, கோவிந்தராஜ் , முருகேசன், பழனி, வீராசாமி, சின்னதம்பி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேதத்தை உடற்கூராய்வு செய்ய

மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். மேற்படி விசாரணையின் போது இறந்து போன வெங்கடேசனை மேற்படி எதிரிகள் ராஜாமணி, வீரன், வளர்மதி ஆகியோர்கள் தாக்கியதாக விவரம் தெரிய வந்தது. எதிரிகளை தேடி பெரியகல்லப்பாடி , தச்சம்பட்டு, சின்னகல்லப்பாடி, மன்னார்பாளையம் , கீழ்கச்சிராப்பட்டு, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் தேடிப்பார்த்து காவல் நிலையம் சென்றேன். தச்சம்பட்டு கிராம நிர்வாக அதிகாரி ஜெயராமன் என்பவர் எதிரிகள் தன்னிடம் ஆஜராகி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க விரும்புவதாக அவர் கூறியதன் பேரில் அவர் கொடுத்த கடிதம் கொடுத்தார். **அந்த கடிதம் அ.த.சா.ஆ. 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு எதிரிகள் ராஜாமணி தானாக முன் வந்து தன்னிடம் ஒப்புதல் வாக்கமூலம் கொடுத்தார். சாட்சிகள் ராமகிருஷ்ணன், சின்னையன் ஆகியோர் முன்னிலையில் ராஜாமணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தின் போது 13.6.2012ம் தேதி பகல் சுமார் 12.30 மணி அளவில் இறந்து போன வெங்கடேசன் என்பவர் வீட்டின் முன்பாக ராஜாமணி, வீராசாமி ஆகியோர் சென்று வெங்கடேசனிடம் ராஜாமணி தங்கை வளர்மதியின் செல்போன் நெம்பரை நியாவிலைக் கடை விற்பனையாளர் சின்னத்தம்பியிடம் அந்த தொலைபேசி நெம்பரை ஏன் கொடுத்தீர்கள் என்று தகராறு செயதார் அதை ஏன் கொடுத்தார் என்று கேட்டதற்கு தன் தங்கை அந்த தொலைபேசி நெம்பரை கொடுத்தாகவும் அதற்கு வீராசாமி போய் வளர்மதியை கூப்பிட்டு வருமாறு ராஜாமணியிடம் கூறியதாகவும் சிறிது நேரத்தில் வளர்மதியும் அந்த இடத்திற்கு வந்தார். அவரிடம் நீயே தொலைபேசி எண்களை கொடுத்து விட்டு தவறாக ஏன் பழி சுமத்துகிறாய் என்று வெங்கடேசனை கேட்ட போது வாய்த்தகராறு ஏற்பட்டு ராஜாமணி, வீராசாமி, வீரன் ஆகியோர்கள் அருகில் உள்ள கட்டிட வேலைகளுக்காக கொட்டப்பட்டிருந்த கருங்கல்ஜல்லி கற்களை எடுத்து வெங்கடேசனின் நெஞ்சுக்குழியில் குத்தி ரத்தக்காயம் ஏற்படுத்தியதாகவும், அதற்கு ஆதரவாக வளர்மதியும் அரை செங்கல்லால் வெங்கடேசனை இடுப்பு ,கால்பகுதியில்

அடித்து காயப்படுத்தினார். வெங்கடேசன் மயக்கமடைந்து கீழே விழுந்ததாகவும் , ரமேஷ் என்பவர் கூச்சல் இடவே அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அந்த இடத்திற்கு ஓடி வந்ததால் எதிரிகள் மூவரும் அந்த இடத்தில் இருந்து ஓடி விட்டார்கள். பின்னிட்டு கிராம நிர்வாக அலுவலரிடம் சரணடைந்து விட்டதாகவும், தன்னை சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்றால் கருங்கல் மற்றும் செங்கல் ஆகியவற்றை எடுத்துக் கொடுப்பதாகவும் கூறினார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ. 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இரண்டாவதாக எதிரி வீரன் என்கிற வீராசாமி என்பவரும் , வளர்மதியும் என் முன்பாக தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். **வீராசாமி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வளர்மதி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ. 19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு எதிரிகளை சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்று சாட்சிகள் ராமகிருஷ்ணன், சின்னையன் அவர்கள் முன்பாக சான்றுப் பொருள் 1 முதல் 3 ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 20 ( 3 வரிசைகள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு ஆஜர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பிறகு இந்த வழக்கில் கிராம நிர்வாக அதிகாரி சின்னையன் , சாட்சி ராமகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து அவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் ரமேஷ், வெங்டேசன், ஆகியோர்கள் 164 கு.வி.மு.ச. வாக்குமூலம் பதிவு செய்ய நீதித்துறைநடுரிடம் 27.12.2012ம் தேதி அன்று அவர்களை ஆஜர் படுத்தி அந்த வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி வாக்குமூலங்கள் அ.த.சா-ஆ. 21 , அ.த.சா.ஆ. 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு இறந்து போன வெங்கடேசன் என்பவரின் குரல்வளை மற்றும் உடல் உள்ளுறுப்புகள் ஆகியவற்றை பரிசோதனை செய்த மருத்துவரிடம் ரசாயண பரிசோதனை அறிக்கை பெற்றேன். ரத்தக்கரை படிந்த

செங்கல் ஆகியவற்றையும் அனுப்பி பரிசோதனை செய்த அந்த அறிக்கையும் பெற்றேன். **தடய அறிவியல் ஆய்வகர் கொடுத்த அறிக்கைகள் அ.த.சா.ஆ. 23, அ.த.சா.ஆ. 24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த வெங்கடேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கு தொடர்பான சாட்சிகள் , வாக்குமூலம் ஆகியவற்றை பரிசீலனை செய்து அரசு குற்றவியல் உதவி இயக்குநரிடம் கருத்துரை பெற்று ஆஜர் எதிரிகள் மீது பிரிவு 302 இ.த.ச. -ன் படி குற்றப்பத்திரிச்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

காட்டாம்பூண்டி ஆரம்ப சுகாதர நிலையத்தில் இருந்தோ திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் இருந்தோ எனக்கு எவ்வித தகவலும் வரவில்லை. ஆனால் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் உடனே கிடைக்கப்பெற்றது.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது)

ஒப்பம்/- நாகராஜன்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal,
Principal Sessions Judge,
Tiruvannamalai.